வேண்டுமென்றால், குறைந்தது 3 இலட்சம் மக்கள் தொகை இருக்கவேண்டுமென்ற ஒரு வரையறை இருக்கிறது. எனவே, மக்கள் தொகை மிகக் குறைவாக இருப்பதன் காரணமாக மட்டுமல்லாமல், மேலும் கிலோ மீட்டர் மிகக் குறைவாக இருப்பதன் காரணமாகவும், இந்த வட்டம் மிகச் சிறிய வட்டமாக இருப்பதாலும் இதைப் பிரிக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 35, திரு. வெ. ஏழுமலை, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்.

35–

மண் பரிசோதனை நிலையம்

***8947–திரு. வெ. ஏழுமலை:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) செஞ்சி தொகுதி, செஞ்சியில் மண் மாதிரி பரிசோதனை நிலையம் ஏற்படுத்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், இந்த ஆண்டில் ஏற்படுத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம், வேளாண்மைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மண் பரிசோதனை நிலையங்கள் 19 மையங்களில் இயங்கி வருகின்றன. விழுப்புரம் மாவட்டப் பணிகளையும் உள்ளடக்கி கடலூரைத் தலைமையிடமாகக் கொண்டு மண் ஆய்வு மையம் இயங்கி வருகிறது. எனவே, செஞ்சியில் விவசாய மண் ஆய்வு மையம் ஏற்படுத்தும் திட்டம் தற்போது அரசிடம் ஏதும் இல்லை என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வளர்ந்து வரும் இந்த விஞ்ஞான தொழில்நுட்ப நேரத்திலே விவசாயிகள் பண்டைய காலத்திலே பயன்படுத்தி வந்த அதே முறையைப் பயன்படுத்தி வருவதால், விவசாய மகசூல் அதிகமாகக் கிடைப்பதில்லை. அந்த மகசூலை அதிகப்படுத்த வேண்டுமென்று சொன்னால், அந்த விவசாயிகள் மண்ணின் தன்மையை அறிய வேண்டும். மாண்புமிகு அமைச்சர்

2002 அக்டோபர் 28]

அவர்கள் தமிழ்நாடு முழுவதும் 19 மையங்கள் இருப்பதாகவும், விழுப்புரத்தை உள்ளடக்கி மண் ஆய்வு மையம் கடலூரில் இயங்கி வருவதாகவும் அறிவித்தார்கள். என்னுடைய தொகுதி, கடலூருக்கு 150 கி.மீ. தொலைவில் இருக்கிறது. ஏற்கெனவே, விவசாயிகள் மண்ணை, தாங்களே கொண்டு சென்று பரிசோதனை செய்து, விளைச்சலை விளைவிப்பதில்லை. எனவே, செஞ்சி பகுதியிலே அந்த மண் பரிசோதனை நிலையம் இருந்தால், அந்த விவசாயிகளுக்கு ஏதுவாக இருக்கும். ஏனென்றால், வளர்ந்து வருகின்ற அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளில் மண் பரிசோதனை செய்து, அதிகமான மகசூலை அந்த நாட்டு மக்கள் பெறுகிறார்கள்.

முற்பகல் 10–30

ஏன், பஞ்சாப், ஹரியானா போன்ற மாநிலங்களிலே 10 கிலோமீட்டருக்கு இடைவெளியில் பரிசோதனை நிலையங்கள் இருக்கின்றன. அங்கு மண் பரிசோதனை செய்து, நல்ல விளைச்சலைப் பெறுகின்றார்கள். எனவே, மாண்புமிகு டாக்டர் அம்மா அவர்கள், தமிழ்நாட்டை இந்தியாவின் முதல் மாநிலமாக ஆக்குவேன் என்று, தலைமை ஏற்று, நாட்டு மக்கள் அனைவரும் பாராட்டுகின்ற வகையில் மிகச் சிறப்பாக ஆட்சி செய்கின்ற, இந்த வேளையிலே, விவசாயப் பெருமக்கள் அதிக மகசூலைப் பெறவேண்டும் என்றால், மண்ணின் உற்பத்தித் திறனை, அந்த விளை நிலத்தில் அந்தத் தன்மை இருக்கின்றதா என்பதை அறிய வேண்டும். அதோடு, மண்ணில் 12 வகையான மணிச் சத்துக்கள் இருக்கின்றன. இந்தச் சத்துக்களில் எந்தச் சத்து குறைகின்றதோ.....

மாண்புமிகு பேரவைத் தலைவர்: ஏழுமலை, செஞ்சியிலே மண் பரிசோதனைக் கூடம் வேண்டும்; உட்காருங்கள். அமைச்சர் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 19 மையங்களில் மண் பரிசோதனைகள் நடந்து வருகின்றன. அதோடு, 16 நடமாடும் ஆய்வு மையங்களும் இருந்து வருகின்றன. இதன்மூலமாக அந்தந்தப் பகுதிகளுக்குச் சென்று மண் ஆய்வுகள் எடுத்து, விவசாயிகள் பயனடைகிற வகையிலே ஆய்வுகள் நடத்தி வரப்படுகின்றன. அந்த வகையிலே, பார்க்கிறபோது, நம்முடைய செஞ்சி வட்டத்திலே 14–8–2001–ல் பசுமலைத்தாங்கல் என்ற பகுதியிலும், 16–8–2001–ல் சத்தியமங்கலம் என்ற பகுதியிலும், 17–8–2001–ல் மணப்பேடு

என்ற பகுதியிலும், 23–5–2002–ல் திருவம்பட்டியிலும், 24–5–2002–ல் அழியூரிலும் மண் ஆய்வுகள் நடத்தப்பட்டன. இப்போதுகூட 28–10–2002–ல் அந்தப் பகுதியிலே மண் ஆய்வுகள் செய்வதற்கு உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. தேவையான அளவுக்கு மண் ஆய்வுகள் நடத்தப்பட்டு வருகின்றன என்பதை இந்த நேரத்திலே நான் பணிவோடு தெரிவித்துக்கொண்டு, மண் ஆய்வு நடத்த விரும்புகிற விவசாயிகள் ஆங்காங்கே இருக்கக்கூடிய விரிவாக்க மையங்களில் அவர்கள் தங்களுடைய மண்ணை ஆய்வுக்கு உட்படுத்தினால், அங்கே இருக்கக்கூடிய உதவி வேளாண்மை அலுவலர்கள் மண் ஆய்வு எடுத்து, அந்த முடிவை விவசாயிகளுக்கு அடிக்கடி தெரிவிப்பார்கள் என்பதை நான் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. வெ. ஏழுமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மண் ஆய்வு, ஊராட்சி ஒன்றியங்களில் உள்ள A.E.O. மூலமாக எடுக்கப்படுவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதிலுரையில் கூறியிருக்கிறார்கள். என்னுடைய வல்லம் ஒன்றியத்திலே ஒரே ஒரு A.E.O. அதிகாரி இருக்கின்றார். அவருக்கு வருடத்திற்கு 100 சாம்பிள்தான் எடுக்க வேண்டுமென்று வரைமுறை இருப்பதாகக் கூறுகின்றார். ஆனால் 66 ஊராட்சிகளை உள்ளடக்கியது. விவசாயிகளுக்கு எவ்வாறு அவர்களுடைய நிலத்திற்குப் பட்டாப் புத்தகம் வழங்கப்படுகின்றதோ அதைப்போன்று விவசாயிகள் கட்டாயம் தங்களுடைய நிலத்தின் மண்ணை ஆய்வு செய்து பரிசோதனை செய்து பயிரிட வேண்டுமென்பதற்காக Soil Health Card System என்ற முறையை அறிமுகப்படுத்தி, அந்தப் பரிசோதனை செய்யும் மண்ணின் தன்மையை அந்தக் கார்டிலே குறித்து, அதன் அடிப்படையில் விவசாயிகள் பயிரிட இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001–2002 ஆம் ஆண்டில் மட்டும் 4 இலட்சத்து 48 ஆயிரத்து, 885 மண் மாதிரிகள் மண் பரிசோதனைக்கு எடுக்கப்பட்டு, மண் பரிசோதனை செய்து தரப்பட்டிருக்கிறது. நடமாடும் ஆய்வு மையத்தின் மூலமாக மட்டும் 2 இலட்சத்து, 25 ஆயிரத்து, 610 மண் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டு, விவசாயிகளுக்கு முடிவுகள் அறிவிக்கப்பட்டிருக்கின்றன. இன்றைக்கு இதய தெய்வம், டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய தலைமையிலே இருக்கிற ஆட்சி, விவசாயிகளுடைய நலனைக் கருதி, விவசாயிகளுக்குத் தேவையான

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2002 அக்டோபர் 28]

உதவிகளைச் செய்து வருகிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கிற இந்தக் கருத்தை இந்த அரசு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளும் என்பதைத் தங்களின் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா எண் 36, செல்வி க. பாலபாரதி, மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.*

36–

மானியத் தொகை

***16268–செல்வி க. பாலபாரதி:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

ஊனமுற்றோருக்கு கடன் வழங்கும் மானியத் தொகை ரூ.2,000/– என்பதை உயர்த்தி வழங்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூல நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

ஊனமுற்றோருக்கு வழங்கப்படும் மானியத் தொகை ரூ.2,000/–ஐ உயர்த்தி வழங்கும் கருத்துரு எதும் அரசின் பரிசிலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

செல்வி க. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் ஊனமுற்ற இளைஞர்கள், பெண்கள், குழந்தைகள் இருக்கிறார்கள். அவர்களுக்கு ஊனமுற்றோர் மறுவாழ்வுத் துறையின் மூலமாக ஆண்டிற்கு 200 பேருக்கு மட்டும்தான் ஒவ்வொரு மாவட்டத்திலும் முதியோருக்கான உதவித் தொகை என்பது வழங்கப்பட்டு வருகிறது. இந்த எண்ணிக்கையை அதிகப்படுத்துவதற்கு அரசிடம் நடவடிக்கை இல்லையென அறிகிறேன். அந்தத் துறையினுடைய அதிகாரிகள் அவ்வாறு தெரிவிக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையில் ஊனமுற்றோர்களுக்கான இரண்டு சதவிகிதம் இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் வேலைவாய்ப்பு என்பதும் அவர்களுக்கு கிடைக்காத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அவர்கள் கடன் உதவி பெற்று ஏதாவது தொழில் தொடங்கலாம் என்று முயற்சி செய்கிறபோது, வங்கிகளில் கடன் கொடுப்பதற்கு மறுக்கிறார்கள். இத்தகைய சூழ்நிலையில்தான் இந்த ரூ.2,000/— மானியத் தொகை என்பதை